551

551

ஜெய காதல் கீதம்

20 DEC 1945
MADRAS

பவானி பிரசுரம்

ஜெய காதல் கீதம்

894.8113

ருஷ்யப் பேராசிரியர்
துர்கனேவ்
எழுதியது

20 DEC 1945
MADRAS

"காங்கேயன்"
தமிழாக்கியது

2200

பவானி பிரசுரம்
ராயவரம்
புதுக்கோட்டை சமஸ்தானம்

முதற் பதிப்பு: 15, டிசம்பர் 1945
உரிமை பதிவு செய்யப்பெற்றது

031,3

விலை

அணா எட்டு

Printed by Shakti Press Ltd., P. I. C. No. MS. 23
Royapettah, Madras. 15-12-45.

பதிப்புரை

இந்தச் சிறு புத்தகம் ருஷ்யப் பேராசிரியர் **துர்கனேவ்** எழுதிய கதையின் மொழி பெயர்ப்பாகும். துர்கனேவ் எழுதிய இந்தக் கதை, உலக இலக்கியத்திலே இடம் பெற்றது.

எங்கள் வெளியீட்டில் இதுதான் முதலாவது. இதைத் தொடர்ந்து உயர்தரமான நாவல், சிறுகதை நூல்கள் வெளிவரும்.

அடுத்துவரும் நூல்கள் :

சுந்தரி

வ. ரா.

மஞ்சி விரட்டு

கொத்தமங்கலம் சுப்பு

அசலா

சரத் சந்திரர்

ஜெய காதல் கீதம்

1

ஓர் இத்தாலியக் கையெழுத்துப் பிரதியில் பின் வரும் வரலாற்றை வாசித்தேன் :—

பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் பெராராவில் இரு வாலிபர் இருந்தனர். ஒருவன் பெயர் பேபியோ; மற்றவன் பெயர் மியூஸியோ. இருவரும் சம வயதுள்ளவர்கள், உறவினர்கள். ஒருவரை யொருவர் பிரிவதே இல்லை. சிறு வயதிலிருந்து மனப்பூர்வமான நண்பர்கள். புராதன குடும்பத்தில் தோன்றியவர்கள். இரண்டு பேருக்கும் நல்ல பணம் உண்டு. குடும்பத் தொல்லை இல்லாதவர்கள். மியூஸியோ சங்கீதத்தில் விற்பன்னன்; பேபியோ சித்திரக்கலையில் நிபுணன். இருவரையும் பார்த்துப் பார்த்து பெராரா நகரம் பெருமையடைந்திருந்தது. அவர்கள் சபையை அலங்கரிக்க வல்லவர்களென்றும், சமூகத்திற்கு ஆபரணங்களாக விளங்கக் கூடியவர்கள் என்றும் கருதிப் பெராரா

வாசிகள் உளம் பூரித்திருந்தனர். இருவரும் வாலிப முடுக்கு நிரம்பியவர்கள். எனினும், தோற்றத்தில் வேற்றுமை உண்டு. மியூஸியோவைக் காட்டிலும் பேபியோ வளர்ந்தவன்; சிவப்பானவன்; பொன் னிறமான தலைமயிருடையவன்; நீல விழிகள். மியூஸியோவுக்குக் கறுப்பு முகம், கறுப்புத் தலை மயிர்; கறுத்த விழிகள். பேபியோவின் உதடு களில் புன்னகை தவழ்ந்துகொண் டிருக்கும். உற் சாகமாகப் பேசுவான். மியூஸியோ தாராளமாகப் பேசமாட்டான்.

அதே காலத்தில், அந்நகரத்தில் வேலரியா என்னும் ஒரு மங்கையும் வசித்து வந்தாள். அந் நகரிலிருந்த சிறந்த அழகி. அவளைப் பார்ப்பதே அருமை. அவள் எல்லோரோடும் தாராளமாய்ப் பழகுவதில்லை. கோயிலுக்குப் போவதற்காக மட் டும் வீட்டிலிருந்து கிளம்புவாள். அவள் தன் தாயு டன் வசித்து வந்தாள். தாய், உயர் குலத்தில் பிறந்த வள்; கைம்பெண்; பணக்காரியல்ல. அவளுக்கு வேலரியாவைத் தவிர வேறு குழந்தைகள் கிடையா. வேலரியா அடக்கமானவள். அவளைக் கண்டவர்கள் எல்லோரும், தங்களையும் அறியாமல் அவளிடம் மரியாதையாக நடந்துகொள்வார்கள். அவ ளுடைய கண்களில் நாணமும் பயமும் நிரம்பியிருந் தன. அவளுடைய குரலைக் கேட்டவர்களே அபூர் வம். இதைப்பற்றிப் பெராரா நகரில் ஒரு வதந்தி

பரவியிருந்தது. எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கும் வைகறைப் போதில், அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டு, வீணையிலுள்ள தந்திகளை மீட்டியவாறு பழங் கீதங்களைப் பாடுவாளாம் வேலரியா. அவளுடைய குரல் இனிமையானது என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். அவளுக்கு, நோய் நொடியில்லாத நல்ல உடல். அவளைப் பார்க்கும் வயோதிக ஆடவர் பெண்டிர்கள்கூட, "இதழ் குவிந்திருக்கும் இந்த மலர் இதழ் விரிந்து யார் தோளில் சேரப் போகிறதோ?" என்று சொல்லிக் கொள்வார்கள்.

2

நம்முடைய தோழர்கள் வேலரியாவை முதல் முதலில் கண்டது, அரச குடும்பத்தில் நடந்த ஒரு முக்கியமான விருந்திலே. வேலரியா தன் தாய் அருகில் உட்கார்ந்திருந்தாள். நண்பர்கள் இருவரும் வேலரியாமீது மோக முற்றனர். அவர்கள் எந்த விஷயத்தையும் தங்களுக்குள் ஒளித்துக்கொள்வதில்லை. இருவரும் தங்கள் மனத்தைத் திறந்து பேசினர். வேலரியாவுடன் நெருங்கிப் பழகுவது; அவள் தங்கள் இருவரில் யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுத்தால், மற்றவர் முணுமுணுக்காமல் பேசாமலிருப்பது என்று முடிவு செய்தனர்.

இருவருக்கும் ஊரில் நல்ல மதிப்பு அல்லவா? பல வாரம் கழித்து வேலரியாவின் இல்லத்திற்குச் சென்றனர். அவளுடைய தாயைக் கண்டு பேசினர். அவள் வேலரியாவைப் பார்க்க அனுமதி யளித்தாள். அதிலிருந்து இருவரும் நாள்தோறும் வேலரியாவைச் சந்தித்து அவளுடன் பேசிக்கொண்டிருந்தனர். நாளுக்கு நாள் காதல்-தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. வேலரியா இருவரில் யாரிடத்திலும் அதிகமான பிரியத்தைக் காட்டவில்லை; அவர்கள் தினம் வருவதை மட்டிலும் விரும்பினாள். அவள் சங்கீத விஷயமாக மட்டும் மியூஸியோவுடன் பேசுவாள்; பேபியோவுடன் எல்லா விஷயத்தைப் பற்றியும் பேசுவாள். அவனோடு பேசுகையில், அவளுடைய நாணமும் சங்கோசமும் குறையும். இருவரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். கடைசியில், முடிவை அறிந்து விடுவதென்று தீர்மானித்து வேலரியாவுக்கு ஒரு கடிதம் எழுதினர். "எங்களில் யாரை மணம் செய்துகொள்ள உனக்குச் சம்மதம்?" என்பதே கடிதத்தின் சாரம்.

வேலரியா கடிதத்தைத் தன் அன்னையிடம் கொடுத்துவிட்டு, தான் என்றும் கன்னியாக இருக்கவே விரும்புவதாகவும், ஆனால் தாய் வற்புறுத்தும் பட்சத்தில், அவள் யாரைக் குறிப்பிடுகிறாளோ அவரைக் கல்யாணம் செய்துகொள்வதாக

வும் கூறினுள். கல்யாணப் பேச்சைக் கேட்டவுடனே, 'அருமந்த குழந்தையை விட்டுப் பிரியப்போகி ரேமே' என்ற எண்ணம் தோன்றியது தாய்க்கு. அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது. இருவருக்கும் எதிர்மறையில் பதில் சொல்ல அவள் விரும்பவில்லே. யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். யாரைத் தேர்ந்தெடுப்பது? அவளுக்கு இருவரும் சமமாகத் தோன்றிய போதிலும் மனத்திற்குள் பேபியோ மீதுதான் அன்பு அதிகம். மகளும் பேபியோவைக் காதலிப்பதாக அவள் நினைத்தாள். இறுதியில் பேபியோ வெற்றி பெற்ருன். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக மியூஸியோ பேசாமல் இருக்கவேண்டியதாயிற்று.

அவன் பேசாமல்தான் இருந்தான். ஆனல், நண்பனின் (இப்போது விரோதி!) வெற்றியைப் பார்த்துக்கொண்டிருக்க அவனல் இயலவில்லே. உடனே சொத்தின் பெரும்பகுதியை விற்ருன். பணத்தை எடுத்துக்கொண்டு, கீழ்நாட்டிற்குப் புறப் பட்டான். பேபியோவிடம் விடைபெறுகையில், மனத்திலிருக்கும் சித்த விகாரங்களும் ஆசையும் அடியோடு நீங்கும் வரையில் சொந்த நகரத்திற்குத் திரும்பி வரப்போவதில்லே என்று கூறினன். குழந்தைப் பருவத்திலும் வாலிபத்திலும் நெருங்கித் தோழமை பூண்டிருந்த நண்பனே விட்டுப்பிரிய பேபியோவிற்குக் கஷ்டமாயிருந்தது.........ஆனல்

இனி வரப்போகும் செல்வத்தை நினைத்தவுடனே அவனுடைய துயரம் பறந்தது.

சீக்கிரத்தில் கல்யாணம் நடந்தது. பேபியோ தனக்குக் கிடைத்த செல்வத்தின் அருமையைக் கல்யாணத்திற்குப் பின்னலேயே அறிந்தான். அவனுக்கு ஓர் அழகிய பங்களாவும் கிடைத்தது. அது பெராராவுக்குக் கொஞ்ச தூரத்திற் கப்பால் இருந்தது. அவன் மனைவி, மாமியார் சகிதம் அங்குச் சென்று குடியேறினன். அப்புறம் வாழ்வு இன்பமானதாக மாறியது. வேலரியா புதிய அழகுடன் விளங்கினுள். பேபியோ புகழ் வாய்ந்த ஓவியக்காரனுனன். ஆனந்தமாக வாழ்ந்த அந்தத் தம்பதிகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள் வேலரியாவின் அன்னை. நான்கு வருஷங்கள் ஓடி மறைந்தன, ஓர் இன்பமான கனவைப்போல. அவர்களுக்கு ஒரே ஒரு குறை: புத்திரப் பேறில்லாமை. நாலாவது வருஷக் கடைசியில் அவர்களுக்கு ஒரு பெருந் துயரம் விளைந்தது. வேலரியாவின் அன்னை காலமானுள்.

வேலரியா கண்ணீரை ஆருகப் பெருக்கி மிக மிக வருந்தினுள். ஒரு வருடம் கழிந்தது. இல்வாழ்வு மீண்டும் இன்ப வாழ்வாக மாறியது. திடீரென்று, ஒருநாள் மாலை மியூஸியோ பெராரா வந்து சேர்ந்தான். அவன் வரப்போவது யாருக்கும் தெரியாது.

3

மியூஸியோ ஊரை விட்டுப்போய் ஐந்து வருஷமாயிற்று. அவனைப்பற்றி யாருக்கும் ஒருவார்த்தை கூடத் தெரியாது. அவன் பூலோகத்திலிருந்து மறைந்து விட்டதாகவே அனைவரும் கருதினர். ஆளுக்கே மோசம் வந்தபிறகு செய்திகள் மறைந்ததில் என்ன அதிசயம் இருக்கிறது?—பேபியோ தனது நண்பனைச் சந்தித்து, உடனே பங்களாவிற்கு வருமாறு அழைத்தான். பங்களாவிற்கு அருகேயுள்ள ஒரு பூந்தோட்டத்தில் விசாலமான அதிதி இல்லம் ஒன்று இருந்தது. அங்கு மியூஸியோ தங்கியிருக்க ஏற்பாடாயிற்று. இதற்கு மியூஸியோ ஒத்துக்கொண்டு, அன்றைய தினமே தனது வேலைக்காரனுடன் அங்குச் சென்றான். வேலைக்காரன் மலாய் நாட்டான். அவன் ஊமை; ஆனால் காது கேட்கும். அவனைப் பார்த்தவுடனே அவன் புத்திசாலி என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். மியூஸியோ விலையுயர்ந்த சாமான்கள் நிரம்பிய பலபெட்டிகளைத் தன்னுடன் கொண்டு வந்திருந்தான்.

மியூஸியோ திரும்பி வந்ததற்காக வேலரியா ஆனந்தமடைந்தாள். அவன் பகல் முழுவதும் தனது சாமான்களைக் கொண்டுவந்து சேர்த்தவாறு இருந்தான். எத்தனை வகையான சாமான்கள்!

பல ரகக் கம்பளிகள், பட்டு வெல்வெட் துணிகள், ஆயுதங்கள், கோப்பைகள், பாத்திரங்கள் பொன்—வெள்ளிக் கருவிகள், தந்தப் பெட்டிகள், வாசனைத் திரவியங்கள், காட்டு மிருகங்களின் தோல்கள், பறவைகளின் இறகுகள்—முதலியன. இவற்றுள் ஒரு முத்துமாலையும் இருந்தது; அது மிகவும் விலையுயர்ந்தது.ஏதோ ஒரு பேருபகாரம் செய்ததற்காகப் பாரசீகச் சக்கரவர்த்தி மியூஸியோவிற்கு அளித்த சன்மானம். மியூஸியோ அதை எடுத்து "இந்த முத்து மாலையை என் கையாலே உனக்குச்....சூட்ட வேண்டும். அநுமதி கொடுப்பாயா?" என்று வேலரியாவைக் கேட்டான். அவள் இணங்கினாள். அந்த மாலை கொஞ்சம் கனமாயிருந்ததுடன், ஒருவகையான கதகதப்பு உணர்ச்சியையும் உண்டு பண்ணியது.

மாலைப் பொழுதாயிற்று. உணவு அருந்திய பின், மூவரும் பங்களாவின் மாடியில் உட்கார்ந்தனர். மியூஸியோ தனது பிரயாண விவரங்களைக் கூற ஆரம்பித்தான். பார்த்த தேசங்கள், மேகத்தை யளாவிய மலைத் தொடர்கள், கடல் போல் பரந்த நதிகள், பெரிய பெரிய கட்டிடங்கள் ஆலயங்கள், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சீவித்திருக்கும் மரங்கள், பஞ்சவர்ணங்களுடன் பொலியும் பறவையினங்கள் முதலியன பற்றி வர்ணனை செய்தான். பெருநகரங்கள்—அங்கு

வாழும் மக்கள் நிலைமை — ஆகியவை பற்றியும் விரிவாகக் கூறினன். கீழ்நாடு முழுவதும் மியூஸியோ வுக்கு நன்ருகத் தெரியும். அவன் பாரசீகம் சென் ருன்; குதிரைகளுக்குப் பேர்போன அரபியநாட்டில் சஞ்சரித்தான்; இந்தியாவில் யாத்திரை செய்தான்; சீனுவும் தெரியும்; திபேத்திற்கும் போயிருக்கிருன். அற்புதமான கதைகள்!—மந்திர சக்தியால் கட்டுண் டவர்கள்போல மிகவும் ரசித்துக் கேட்டுக்கொண் டிருந்தனர் பேபியோ தம்பதிகள்.

மியூஸியோவின் தோற்றம் அதிகமாகமாறிவிட வில்லை. சிறுவயதிலிருந்து அவன் கறுப்பு; இப்போது இன்னுங் கொஞ்சம் கறுப்பு. கண்கள் முன்னைவிட உறுதியாக இருந்தன. ஆனல், முகபாவம் முற்றி லும் மாறியிருந்தது. இராக்காலத்தில் காடுகளில் அலைந்தபோது நிகழ்ந்த ஆபத்துக்கள், செவிடுபடும் புலி உறுமல்கள், நரபலிக்காக அலைந்து திரிந்த மத வெறியர்கள் முதலிய பயங்கரமான விஷயங்களைப் பற்றிச் சொல்லியபோது கூட அவன் முகத்தில் ஒருவிதமான உணர்ச்சியையும் காணேம்.

மியூஸியோ இந்தியப் பிராமணர்களிடம் கற்ற பல வித்தைகளைப் பேபியோ தம்பதிகள் முன் காட் டினன். அந்தப் பயங்கரமான கண்கட்டு வித்தை களைக் கண்டு பேபியோவும் வேலரியாவும் அதிசயம் அடைந்து கதிகலங்கினர். "என்ன, இவன் மந்திர வாதியாக இருப்பானே?" என்று கூட வேலரியா

நினைத்தாள். அவன் மகுடி வாத்தியத்தை ஊதிக் கொண்டு பாம்பாட்டத் தொடங்கியதும் அவள் அலற ஆரம்பித்தாள்.

இரவாயிற்று. மியூஸியோ தன் நண்பர்களுக்கு ஷிராஸ் மதுவை அளித்தான். பொன்னிறமான அந்த மது, கிண்ணத்தில் பாய்ந்தவுடன் பளிச் சென்று மின்னிற்று. அதன் ருசி ஐரோப்பிய மதுவகைகளைப் போன்றதல்ல. அது மிக இனிமை யாகவும் காரமாகவும் இருந்தது. கொஞ்சங் கொஞ்ச மாகப் பருகியவுடனே அது உடம்பெங்கும் ஒருவகை உணர்ச்சியை உண்டாக்கும். மியூஸியோ, பேபியோ தம்பதிகளுக்கு ஒரு கிண்ணம் மதுவளித்தான். தானும் ஒரு கிண்ணம் பருகினான். வேலரியா மது வைப் பருகுகையில், மியூஸியோ அவள் கிண்ணத் திற்கு முன் குனிந்து, மெல்லிய குரலில் ஏதோ குசு குசுவென்று சொல்லிவிட்டு விரல்களை உதறினான். வேலரியா இதைக் கவனித்தாள். மியூஸியோவின் போக்குகள் எல்லாம் விநோதமானவையாக இருந்த தால், அவன் 'இந்தியாவில் புது மதத்தைத் தழுவி விட்டான் போலிருக்கிறது; அங்கு இந்தமாதிரி தான் பழக்கவழக்கங்கள் இருக்கும் போலும்' என்று அவள் கருதினாள். கொஞ்ச நேரங் கழிந்தது. அவனை நோக்கி, "யாத்திரை செய்தபோதுகூட நீங்கள் சங்கீதத்தை விடவில்லையா?" என்று கேட்டாள். மியூஸியோ அதற்குப் பதில் சொல்லும் முறையில்

இந்திய வீணையைக் கொண்டு வருமாறு மலாய்க்காரனிடம் கூறினன்.

மியூஸியோ முதலில் பல சோகரசப் பாடல்களை இசைத்தான். அவை நாடோடிப் பாட்டுக்கள். இத்தாலியனுடைய காதிற்குக் கடூரமானவை. ஆனல், கடைசிப் பாட்டை ஆரம்பித்ததும் ஓசை மேலே போய்க்கொண்டே இருந்தது. காதல் ரசம் வெள்ளமெனப் பொங்கி வழிந்தது. வீரியமும் கம்பீரமும் குதூகலமும் ஒருங்கே நிறைந்து எழுந்தது. புருஷன், மனைவி-இருவருடைய மனமும் கலங்கியது. அவர்களுடைய கண்ணிலே, நீர் பெருகி வழிந்தது. மியூஸியோ தலைகுனிந்தவாறு அதன் மீது சாய்ந்து முன்னிலும் பலமடங்கு அதிகமாக நாதத்தை எழுப்பினன். எல்லாம் முடிந்த பிறகு வீணையை மேஜை மேல் வைத்தான். பேபியோ, மதிமயங்கியவனாய், "இது என்ன ராகம், என்ன பாட்டு?" என்று வினவினன்.

"இதுவா? இந்த ராகம்........சிங்களத் தீவில் ஒரு முறை கேட்டேன். சிங்களவர்கள் இதைக் 'காதல் வெற்றியில் விளைந்த கீதம்' என்று கூறுகின்றனர்" என்றான் மியூஸியோ. "எங்கே, அதைத் திரும்பப்பாடு" என்று கேட்டான் பேபியோ. "முடியாது. ரொம்ப நேரமாகி விட்டது. வேலரியாவுக்கு ஆயாசமாக இருக்கும். அவள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேணும். எனக்கும் நேர

மாகி விட்டது.........களைப்பா யிருக்கிறது" என்ருன் மியூஸியோ.

வெகுநாள் பழகிய நண்பன் போல மியூஸியோ வேலரியாவிடம் மரியாதையாக நடந்து கொண் டான். ஆனல் கடைசியில் அவளிடம் விடை பெற் றுக் கொள்ளுகையில், தனது கைவிரல்களால் அவ ளுடைய உள்ளங்கையைப் பலமாக அழுத்தியதுடன் அவளுடைய முகத்தை உற்று நோக்கினன். அவள் மியூஸியோவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை யாயினும் அவள் முகம் நாணமடைந்தது; அவ னுடைய பார்வையை உணர்ந்தாள். மியூஸியோ விடம் ஒன்றும் பேசவில்லை. கைகுலுக்கி விட்டு விலகிக் கொண்டாள். அவன் போனதற்கப்புறம், கதவருகே நின்று அவனைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். சென்ற காலத்தை நினைத்துப் பார்த் தாள். அப்பொழுதுகூட வேலரியாவுக்கு அவ னிடம் பயந்தான்........அவளுடைய சித்தம் கலங் கியது.

மியூஸியோ அதிதி இல்லஞ் சென்ருன். புருஷ னும் மனைவியும் பள்ளியறைக்குச் சென்றனர்.

4

வேலரியாவுக்குத் தூக்கம் வர நாழிகையாயிற்று. அவளுடைய மனத்தில் என்னென்னவோ எண் ணங்கள் ஓடின. தலையில் ஏதோ ஒரு ரீங்கார ஓசை

ஒலித்துக்கொண்டிருந்தது........இதற்கு அந்த விநோதமான மது, மியூஸியோவின் கதைகள், இசை - இவைதான் காரணமாயிருக்கலாம் என்று அவள் கருதினுள்........கடைசியில், பொழுது புலரு முன் கொஞ்சம் கண்ணை மூடினுள். தூக்கத்தில் ஒரு விநோதமான கனுக் கண்டாள்.

ஒரு விசாலமான அறைக்குள் நுழைகிருள்........ அந்த அறையை இதற்குமுன் ஒருமுறை கூடப் பார்த்ததில்லை. நீல நிறமான பீங்கான் கற்களா லான சுவர்கள்; சந்திர காந்தக் கற்களால் இழைக் கப்பட்ட தூண்கள்; மேலே சலவைக்கல் வேலை. தூண்களும் தளமும் வெளிச்சத்தைப் பிரதிபலிக் கின்றன........செந்நிறமான ஒருவகை ஒளி நாலா புறத்திலும் பரவி எல்லாப் பொருள்களையும் ஒரே வடிவாக்குகிறது. அறையின் நடுவில் ஒரு கம்பளி விரிக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது, தங்கச் சரிகை வேலைப்பாடமைந்த மெத்தை. மிருக வடி வில் அமைந்த இரு நறுமணத் தட்டுகளிலிருந்து வாசனைத் திரவியங்களின் புகை வெளிவந்துகொண் டிருக்கிறது. எங்கும் ஒரு ஜன்னல்கூடக் கிடை யாது. வாசலில் இருந்த வெல்வெட்டுத் திரை திடீ ரென்று விலகுகிறது. மியூஸியோ வருகிருன்; குனிந்து மரியாதை செய்கிருன்; புன்னகை புரிகி ருன். அவனுடைய முரட்டுக் கரங்கள் வேலரியா வின் இடையைத் தழுவுகின்றன. அந்த வறண்ட

உதடுகள், சிவந்த கன்னங்களை முத்தமிடுகின்றன. அவளுக்கு உடம்பெல்லாம் எரிகிறது. மெத்தை யின்மீது குப்புறச் சாய்கிறாள்........

பயத்தினால் அலறிக்கொண்டே படுக்கையி லிருந்து எழுந்தாள் வேலரியா. 'நாம் எங்கிருக்கி றோம்? நமக்கு என்ன நேர்ந்தது?' என்பதே அவ ளுக்கு விளங்கவில்லை. படுக்கையில் உட்கார்ந்த வாறு தன்னையே பார்த்தாள்.......மெய் சிலிர்க் கிறது.......பேபியோ அருகில் படுத்திருக்கிறான். அவனுக்குப் பலத்த தூக்கம்; பிறைமதியின் ஒளி வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த அவனுடைய முகம் வெளுத்திருக்கிறது. வேலரியா புருஷனை எழுப்பி னாள் - அவன் விழித்துப் பார்த்தான். உடனே ஆச்சரியத்துடன், "என்ன! என்ன நேர்ந்தது உனக்கு?" என்று கேட்டான்.

"நான்.......நான் ஒரு பயங்கரமான கனவுக் கண்டேன்" என்று அவள் மெல்லிய குரலில் சொன்னாள். அவள் இன்னும் நடுங்கிக்கொண் டிருந்தாள்.

அதே சமயம், அதிதி இல்லத்திலிருந்து உச்ச ஸ்தாயியில் பல குரல்கள் எழும்பின - முதல் தினம் இரவு மியூஸியோ பாடிய காதல் கீதமே அது என் பது விளங்கியது - பேபியோ வியப்புடன் தன் மனை வியைப் பார்த்தான்.......அவள் கண்ணை மூடிக் கொண்டு மறுபுறம் திரும்பினாள். இருவரும் கலக்

கத்துடன் பாட்டைக் கேட்டுக்கொண்டேயிருந் தனர். கடைசியில் வீணையின் நாதம் நின்றது. சந்திரன் மேகத்தில் மறைந்தான். அறையில் இருள் அடர்ந்தது........இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் படுக்கையில் சாய்ந்தனர்.

5

மறுநாள் காலை மியூஸியோ உணவருந்த வந்தான். அவனுடைய முகத்தில் குதூகலம் நிறைந்திருந்தது. அவன் வேலரியாவிடம் ஆனந்தமாய்ப் பேசினான். அவள் மனம் குழம்பியவாறு ஏதோ பதில் சொன்னாள் - மகிழ்ச்சி நிறைந்த அந்த முகத்தையும், ஊடுருவிப் பார்க்கும் கண்களையும் அவள் பார்த்தாள்; கலங்கினாள். மியூஸியோ தன் கதைகளை ஆரம்பிக்கப் போனான்........ஆனால் பேபியோ இடைமறித்துக் கொண்டான்.

"இடம் புதிதானதால் தூக்கம் வரவில்லை போலிருக்கிறது. நேற்றிரவு பாடிய பாட்டையே காலையில் மறுபடி பாடினாய். நாங்கள் அதைக் கேட்டோம்."

"நீங்கள் கேட்டீர்களா?—அப்படியா?—நான் பாடினது உண்மையே. ஆனால், அதற்கு முன் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு விநோதமான கனவும் கண்டேன்."

வேலரியாவின் காதில் ஊசியைக் கொண்டு குத்துவதுபோலிருந்தது.

"என்ன கனவு கண்டாய்?" என்று கேட்டான் பேபியோ.

மியூஸியோ வேலரியாவைப் பார்த்துக் கொண்டே சொன்னன் "கீழை நாட்டு முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு விசாலமான அறைக்குள் நான் நுழைந்தேன். அந்த அறையின் மேல் தளம் வளைவாக அமைந்திருந்தது. சந்திரகாந்தக் கற்களால் இழைக்கப்பட்ட தூண்கள் தளத்தைத் தாங்கி நின்றன. சுவர்களில் நீல நிறமான பளிங்குக் கற்கள். ஜன்னல்கள் இல்லை. மெழுகு வர்த்திகளும் கிடையா. செந்நிறமான ஒருவகை ஒளி அறைமுழுவதும் பரவியிருந்தது. மிருகவடிவத்தில் அமைந்த இரு நறுமணத்தட்டுகளிலிருந்து வாசனைத் திரவியங்களின் புகை வெளிவந்துகொண்டிருந்தது. தரையின்மேல் ஒரு கம்பளியும், அதன்மீது சரிகைவேலைப்பாடமைந்த மெத்தைகளும் இருந்தன. வாசலில் ஒரு திரை இருந்தது. அதை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தேன். எதிர் வாசலின் வழியே மற்ருெரு பெண் உள்ளே வந்தாள். ஒருகாலத்தில் அவளை நான் காதலித்தேன். அவள் அச்சமயத்தில் வெகு அழகாகத் தோன்றியதால், என் காதல் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது................"

அத்துடன் நிறுத்திவிட்டான் மியூஸியோ. வேலரியா சித்திரப் பதுமை போல உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகம் வெளுத்தது—மூச்சுத் திணறியது.

"அப்புறம் படுக்கையிலிருந்து எழுந்தேன். வீணையை எடுத்து வைத்து அந்தக் கீதத்தை இசைத்தேன்."

"சரி, அந்தப் பெண் யார்?" என்று கேட்டான் பேபியோ.

"யாரா? ஒரு கிழக்கிந்தியன் மனைவி; நான் அவளை டில்லி நகரத்தில் கண்டேன்.......அவள் இப்போது உலகத்தில் இல்லை. இறந்துவிட்டாள்."

"அவள் புருஷன்?"

"புருஷனும் செத்துப்போய்விட்டானும். ஜனங்கள் அப்படித்தான் சொல்லுகிறார்கள்."

"ரொம்ப விநோதமாயிருக்கிறது. நேற்றிரவு என் மனைவியும் ஒரு அதிசயமான கனுக் கண்டாள், அதை அவள் என்னிடம் சொல்லவில்லை."

இச்சமயத்தில் வேலரியா எழுந்து வெளியே போய்விட்டாள். சாப்பிட்டானதும், பெராரா நகரில் ஏதோவேலையிருப்பதாகச் சொல்லிவிட்டு மியூஸியோ வெளியிற் சென்றான்.

6

அவன் திரும்பி வருவதற்கு முன்னால், பேபியோ தன் மனைவியின் உருவப்படம் ஒன்றை வரைந்து வந்தான். படம் அனேகமாக முடியும் தறுவாயில் இருந்தது. முகத்தை மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும்: அதுவும் சுலபமான வேலை. எழுதுகோலை வைத்து, இரண்டொரு வரி இழுக்கவேண்டியது தான். அப்புறம் அந்த அருமையான வேலையைப் பார்த்துப் பார்த்துப் பெருமையடையலாம்.

மியூஸியோ பெராராவுக்குச் சென்றபின், பேபியோ தனது கலாமண்டபத்திற்குள் நுழைந் தான். அவனுடைய வருகையை எதிர்பார்த்து வேல ரியா அங்குக் காத்திருப்பது வழக்கம். அன்று கலா மண்டபத்தில் வேலரியாவைக் காணோம். பெயர் சொல்லி அழைத்துப் பார்த்தான். பதில் இல்லை. பேபியோவின் மனதில் பரபரப்பு உணர்ச்சி உண் டாயிற்று. வீடு முழுவதும் தேடினான்; காணோம். தோட்டத்திற்கு ஓடினான். அங்கு ஒரு மூலையில் வேலரியாவைக் கண்டான். கீழே தலைகுனிந்த வாறு, கையை முழங்காலில் கட்டிக்கொண்டு அவள் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்தாள். கணவனைக் கண்டவுடனே அவளுக்குச் சந்தோஷம் உண்டா யிற்று. பேபியோ பரபரப்புடன் பல கேள்விகள் கேட்டான். அவள் சுருக்கமாகப் பதில் சொன்னாள்.

“எனக்குத் தலைவலி. இருந்தாலும் பாதகமில்லை. கலாமண்டபத்திற்கு வருகிறேன். பார்த்துப் படம் எழுதுங்கள்.” பேபியோ அவளை அழைத்துக் கொண்டு கலாமண்டபத்திற்குச் சென்றான். அவளை ஒரு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு, எழுது கோலைக் கையில் எடுத்தான். மிகவும் சிரமப்பட்டும், முகச்சாயல், விரும்பியபடி அமையவில்லை. வேலரி யாவின் முகம் சோர்ந்திருந்தது....அதுதான் முக்கிய காரணமா? இல்லை, இல்லை; வழக்கமாகக் காணும் அந்தத் தூய, பரிசுத்தமான முகபாவம் எங்குப் போய் மறைந்துகொண்டதோ? அவனுக்கு அலுப்பு உண் டாயிற்று; எழுதுகோலைக் கீழே எறிந்தான் “வேல ரியா, இன்று மனம் சரியாயில்லை. நீ போய்க் கொஞ்சநேரம் தூங்கு” என்று சொல்லிவிட்டுப் படத்தைச் சுவரருகே திருப்பி வைத்தான். “ஆமாம் தலை வலிக்கிறது” என்று சொல்லிக்கொண்டே வேலரியா தனது அறைக்குச் சென்றாள்.

பேபியோ கலாமண்டபத்தில் தனியாக இருந் தான். அவன் இன்னதென்று தனக்குத் தோன் றாத ஒருவகைக் குழப்பத்தில் மயங்கி நின்றான். மியூஸியோ தன் வீட்டில் தங்கி யிருந்தது அவ னுக்கு மிகவும் சங்கடத்தை விளைவித்தது. மியூ ஸியோ பழைய மியூஸியோவாகத் தோன்றவில்லை கண்காணாத நாடுகளிலிருந்து அவன் கொண்டுவந்த விநோதமான, விசித்திரமான பொருள்கள்; அந்த

மாந்திரீக வேலைகள், கீதங்கள், பானங்கள், ஊமை மலாய்க்காரன் - இவையெல்லாம் மியூஸியோமீது வெறுப்பை உண்டாக்கின.

"மேஜையில் உணவைப் பரிமாறிக்கொண்டிருக்கும்போது அந்த மலாய்க்காரன் என்னை ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்? அவனுக்கு இத்தாலிய பாஷை தெரிந்திருக்கத்தான் வேண்டும். அவன் நாக்கைப் பலிகொடுத்ததன் மூலம் அபார வல்லமை பெற்றிருப்பதாக மியூஸியோ சொன்னானே!— அந்த அபார வல்லமை எத்தகையது? நாக்கைப் பலி கொடுப்பதன்மூலம் அதை எவ்வாறு பெறமுடியும்? இதெல்லாம் விசித்திரமாக இருக்கிறதே! மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாததாகவல்லவோ இருக்கிறது!'—இவ்வாறு அவன் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றின.

பேபியோ தன் மனைவி அறைக்குச் சென்றான். அவள் படுக்கையில் படுத்திருந்தாள். ஆனால் தூங்கவில்லை. புருஷன் காலடியோசையைக் கேட்டவுடன் அவளுக்குக் களிப்புண்டாயிற்று. பேபியோ படுக்கையருகே உட்கார்ந்து, அவள் கையைப் பற்றி அதை மெதுவாகத் தடவிக் கொடுத்தான். கொஞ்ச நேரங் கழிந்தது.

"நேற்றிரவு விநோதமான கனாக்கண்டதாகச் சொன்னாயே!—அது என்ன கனா? மியூஸியோவின் கனவைப் போலவா?"

நாணத்தினுல் வேலரியாவின் கன்னங்கள் சிவந்தன.

"இல்லே, இல்லே. நான்.........ஒரு கோரமான உருவத்தைப் பார்த்தேன். அது என்னேக் கொல்ல முயன்றது."

"கோரமான உருவமா?—மனிதனு?"

"இல்லே, ஏதோ.......ஏதோ ஒரு மிருகம்போல இருந்தது."

வேலரியா முகத்தைத் தலேயணேயில் புதைத்துக் கொண்டாள். பேபியோ அவளுடைய மெல்லிய கையைத் தன் உதட்டருகே கொண்டு சென்ருன்.

தம்பதிகள் பகற்பொழுதை அச்சத்துடன் கழித்தனர். தலேக்குமேலே ஏதோ ஒரு தொல்லே காத்திருப்பதுபோல அவர்களுக்குத் தோன்றியது. 'அது என்ன தொல்லே? என்பது அவர்களுக்குத் தெரியவில்லே. இருவரும் ஒருவரையொருவர் பிரியாதிருக்க விரும்பினர். மனத்தில் இருப்பதை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளவும் இல்லே. பேபியோ ஓவியத்தை முடிக்க விரும்பினுன். புகழ் பெற்ற ஒரு கவியின் பாடலே வாசிக்கவும் முயன்ருன். ஆனுல் அவனுல் ஒன்றும் முடியவில்லே.............இரவில் உணவு அருந்தும் வேளேயில் மியூஸியோ திரும்பி வந்தான்.

7

அவன் சாந்தமாகவும் அமைதியாகவும் இருந்தான். முன்போல் அதிகமாய்க் கதை அளக்கவில்லை. சென்ற காலத்தில் நடந்த சம்பவங்கள், ஜெர்மன் போர், சார்லஸ் சக்கரவர்த்தி ஆகியோரைப் பற்றி பேபியோவிடம் சில விஷயங்களைக் கேட்டான். ரோம் நகருக்குப் போகப் போவதாகவும், புதிய பாப்பாண்டவரை பார்க்க விரும்புவதாகவும் அவன் கூறினன். அவன் ஷிராஸ் மதுவை மீண்டும் வேலரியாவுக்கு அளித்தபோது அவள் 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டாள்.

மனைவியுடன் பள்ளியறைக்குத் திரும்பி வந்ததும் பேபியோ பலத்த தூக்கத்தில் ஆழ்ந்தான்....... ஒருமணி நேரங்கழித்து விழித்துப் பார்த்தான். படுக்கையில் யாரையும் காணோம். வேலரியா எங்கே? அவசர அவசரமாக எழுந்து பார்த்தான்—அவள் அப்பொழுதுதான் தோட்டத்திலிருந்து உள்ளே வந்துகொண்டிருந்தாள். நிலா பால் போலக் காய்ந்துகொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற்கு முன்னல் இலேசாக ஒரு தூற்றல் தூறியது—அவளுடைய கண்கள் அகலவிரிந்திருந்தன. முகத்தில் ஏதோ ஒருவகையான பயம் குடிகொண்டிருந்தது. வேலரியா படுக்கையருகே வந்து இரு கைகளையும் அகல விரித்துக்கொண்டே 'தொப்' பென்று

கீழே சாய்ந்தாள். பேபியோ ஏதோ கேட்டதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவன் அவளைத் தொட்டுப் பார்த்தான். உடம்பும், தலைமயிரும் நனைந்திருந்தது. காலில் வெண்மணல் ஒட்டிக் கொண்டிருந்தது. அவன் எழுந்து தோட்டத்திற் குள் ஓடினான். சந்திரிகையின் ஒளியால் எல்லாப் பொருள்களும் தெளிவாகத் தெரிந்தன. பேபியோ நாற்புறங்களிலும் சுற்றிப் பார்த்தான். மணலிலே கால்தடம் தெரிந்தது. இரண்டு பேர் நடந்துபோ யிருக்கின்றனர். ஒன்றிற்குக் கால் அணி (பூட்ஸ்) இல்லை. தடம் எதுவரையிலும் போயிருக்கிற தென்று பார்த்தான். பேபியோவின் வீட்டிற்கும் அதிதி இல்லத்திற்கும் யிடையிலுள்ள பர்ணசாலை வரையிலும் இருந்தது. அவன் பிரமையுடன் நின்று கொண்டிருந்தான். ஆ, அந்த வீணையின் இசை— பாட்டு மீண்டும் கிளம்பியது! பேபியோ நடுங்கினான்; அதிதி இல்லத்திற்குள் ஓடினான்...........மியூஸியோ நடு அறையில் நின்றிருந்தான் வீணையைக் கையில் ஏந்தியவாறு.

பேபியோ அவன் மீது பாய்ந்தான்.

"நீ தோட்டத்திற்குள் வந்திருந்தாயல்லவா? சொல், மேல் எல்லாம் நனைந்திருக்கிறதே!"

"இல்லை........ஊஹூம்......எனக்குத் தெரியாது ....நான் வெளியே போகவில்லையே!" என்று தத் தித் தடுமாறிப் பதில் சொன்னான் மியூஸியோ.

பேபியோ அவனுடைய கையைப் பற்றிக் கொண்டு, "சரி நீ ஏன் மறுபடியும் அந்த ராகம் வாசிக்கிருய்? மீண்டும் சொப்பனம் கண்டாயா?"

மியூஸியோ பேபியோவை அதிசயத்துடன் பார்த்தான். ஆனல், பதில் சொல்லவில்லை.

"என்ன பேசாமல் இருக்கிருயே, சொல்லு!" என்று பேபியோ வற்புறுத்திஞன்.

மியூஸியோ மெய்மறந்தவாறு கானத்தில் ஆழ்ந்தான்.

பேபியோ நாலைந்து அடி பின்வாங்கிஞன். மியூஸியோவை உற்று நோக்கிஞன். கொஞ்ச நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்........வீட்டிற்குத் திரும்பிஞன்.

தோளில் தலை சாய்த்தவாறு, இருகைகளை அகலவிரித்துக்கொண்டு வேலரியா தூங்கிக்கொண்டிருந்தாள். பேபியோ எழுப்பிஞன்...........வேலரியா 'தடா'லென்று எழுந்து அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டாள்; மார்பை இறுக்கத் தழுவிஞள். அவளுடைய உடம்பு நடுங்கியது.

"கண்ணே, உன் உடம்பிற்கு என்ன? சொல்லு, சொல்லு" என்று ஆதரவுடன் பேபியோ கேட்டான்.

அவள் உணர்வு இழந்தவள்போல, அவனுடைய மார்பிலே சாய்ந்திருந்தாள்." "ஹா, எவ்வளவு

பயங்கரமான காட்சிகள்!" என்ற வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வெளிவந்தன.

பேபியோ ஏதோ கேட்க வாயெடுத்தான்.........
ஆனால் அவள் நடுங்கினாள்........

அருணோதயத்தின் செவ்வொளி, கண்ணாடி ஜன்னல்களைச் செம்பொன் மயமாக்கிற்று.

வேலரியா புருஷனுடைய மடியில் படுத்துக் கண்ணயர்ந்தாள்.

8

மறுநாள் காலை மியூஸியோ எங்குப் போனானென்பது தெரியவில்லை. வேலரியா அருகே இருந்த ஒரு மடாலயத்திற்குச் செல்ல விரும்புவதாகத் தனது கணவனிடம் கூறினாள். அந்த மடாலயத்திலிருந்த ஒரு வயோதிக சந்நியாசியிடம் வேலரியாவுக்கு மிகவும் பக்தி உண்டு. "என்ன விசேஷம்? எதற்காக அங்குப் போகவேண்டும்?" என்று பேபியோ கேட்டான். கொஞ்ச நாளாக மனம் சரியாக இல்லை யென்றும், சந்நியாசி யிடம் சென்று மன ஆறுதல் பெற்றுவர விரும்புவதாகவும் அவள் பதில் அளித்தாள். அவளுடைய இருண்ட முகத்தையும் ஈனக்குரலையும் கண்ட பேபியோ, "சரி" யென்றான். அந்தச் சந்நியாசி நல்ல இத வார்த்தைகளைச் சொல்லுவார்; அவளுடைய கவலையை எல்

லாம் நீக்குவார்........நாலுபேர் துணைக்குவர வேலரியா மடாலயத்திற்குப் புறப்பட்டாள். பேபியோ மனைவியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே தோட்டத்தில் அலைந்துகொண் டிருந்தான். 'இரவில் அவளுக்கு என்ன நேர்ந்தது?' என்பதை யறிய அவன் மிகவும் முயன்றான்........ஒரு முறைக்கு இரு முறையாக, பலமுறையாக அதிதி இல்லத்திற்குள் நுழைந்து பார்த்தான்: மியூ ஸியோ இன்னும் திரும்பிவரவில்லை. மலாய்க்காரன் மட்டும் சிலைபோல நின்றுகொண்டிருந்தான். வாலைக் குழைக்கும் நாயைப்போல, அவன் பல்லை இளித்துக் காட்டினான்.

வேலரியா கொஞ்சங்கூட நாணமல் எல்லா விஷயங்களையும் சந்நியாசியிடம் விவரமாகக் கூறினாள். சந்நியாசி அவள் சொன்னதைக் கவனமாகக் கேட்டபின், அவளை ஆசீர்வதித்தார்; பாவங்களிலிருந்து கடைத்தேற்றினர். அப்பொழுது அவருடைய மனதில் தோன்றியதாவது: "மாந்திரீகம், பில்லி சூனிய வேலைகள்...........இதை இப்படியே விட்டுவிடக் கூடாது"........வேலரியாவைத் தேற்றி அவளுக்கு ஆறுதல் அளிப்பதற்காகச் சந்நியாசி அவளுடன் வீட்டிற்கு வந்தார்.

சந்நியாசியைப் பார்த்தவுடனே பேபியோ திடுக்கிட்டான். வயதும் அனுபவமும் ஒருங்கே நிறைந்த அந்தத்துறவி, பேபியோ இனி என்ன

செய்யவேண்டுமென்பதை முன்னுலேயே ஆலோசித்து வைத்திருந்தார். வேலரியா சொன்ன விஷயங்களை அவர் யாரிடமும் சொல்லவில்லை. மியூஸியோவின் நடத்தை, அவன் பாட்டுக்கள்—கதைகள் எல்லாம் வேலரியாவின் மனத்தைக் கலைத்துவிட்டன. "முடியுமானுல், அவனை வீட்டிலிருந்து ஒட்டிவிடுவதுதான் நல்லது" என்று அவர் பேபியோவுக்குப் புத்திமதி கூறினுர். "முன்காலத்தில் கூட மியூஸியோவுக்கு மதத்தில் நம்பிக்கை கிடையாது. கிறிஸ்தவமதம் பரவாது, அறியாமை இருளில் மூழ்கிக்கிடக்கும் பல நாடுகளில் அவன் சுற்றியிருக்கிறுன். அவன் அதர்மங்களைக் கையாளலாம். தவிர, மந்திரக் கலையில் வல்லவனு யிருக்கலாம். பழையநாள் நட்பு ஒரு புறம் இருந்தாலும், பிரிந்து வாழ்வதுதான் நலம்."

பேபியோ, சந்நியாசி சொன்னதை முற்றிலும் ஒத்துக்கொண்டு அதை மனைவியிடமும் கூறினுன். அவள் "இது ரொம்ப நல்ல யோசனை" என்றுள். தம்பதிகளின் வாழ்த்துக்களையும் மடாலயத்திற்குப் பெரும் சன்மானங்களையும் பெற்றுக்கொண்டு அவர் திரும்பினுர்.

இராச் சாப்பாடானதும், மியூஸியோவிடம் உண்மையைக் கேட்பதென்று பேபியோ கருதினுன். ஆனுல், அந்த மாயாவி இன்னும் திரும்பி வரவில்லை.

9

வேலரியா சீக்கிரமாகத் தூங்கிவிட்டாள். பேபியோவுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் சிந்தனையிலே மூழ்கியிருந்தான்: "உண்மையில் மியூஸியோ மந்திரவாதிதானா? அவன் வேலரியாவுக்கு மருந்து வைத்துவிட்டானா? அவளுக்கு நோய்தான்.......... ஆனால் என்ன நோய்?"—இவ்வாறு பலவிதமாக யோசித்துக்கொண் டிருந்தபோது, நிர்மலமான வானில் சந்திரன் உதயமானான். வெண்மதியின் ஒளி கண்ணாடி ஜன்னல்கள் மூலம் பள்ளியறையை எட்டிப் பார்த்தது. அதிதி இல்லத்திலிருந்து உண்டான ஒருவகை நறுமணம் காற்றில் கலந்து வருவது போல் பேபியோவுக்குத் தோன்றியது........அதே சமயத்தில் குசு குசு வென்ற ஒரு மெல்லிய குரல் கேட்டது. வேலரியா மெதுவாகப் படுக்கையிலிருந்து எழ முயன்றாள். பேபியோ திடுக்கிட்டான். "என்ன நடக்கிறதோ பார்க்கலாம்" என்று எண்ணியவாறு திறந்த கண் மூடாமல் பார்த்துக்கொண்டே இருந்தான். அவள் முதலில் ஒரு காலை எடுத்துக் கீழே வைத்தாள். அப்புறம் இரண்டாவது கால் படுக்கையிலிருந்து இறங்கியாயிற்று. தூக்கக் கலக்கத்துடன், முன்னால் பார்த்தவாறு நித்திராசரர்களைப்போல (தூக்கத்தில் நடந்து செல்பவர்கள்) வாசலை நோக்கிப் போனாள். யாரையோ அவ

லுடன் தேடுவதுபோல, அவள் தன் கைகளை முன் ஞல் நீட்டிக்கொண்டிருந்தாள். படுக்கையறைக்குப் பின்புறமாக மற்ருெரு வாசல் இருந்தது. பேபியோ அதன் வழியாக ஓடிவந்து முன் வாசல் கதவை மூடிஞன்....அவன் கைப்பிடியைத் தொட்டவுடனே, உள்ளேயிருந்து யாரோ கதவைத் தள்ளுவது போல........மிக மிகப் பலமாகத் தள்ளுவது போல........தோன்றியது. பேபியோ கதவை மூடிய வுடன், உள்ளே அழுகைக்குரல் உண்டாயிற்று.

'மியூஸியோ திருப்பி வந்திருக்க மாட்டான். இது நிச்சயம்' என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. 'எதற்கும் பார்ப்போமே' என்று கருதியவஞய் அதிதி இல்லத்தை நோக்கி ஓடிஞன்....

சந்திரனது அமுத வெள்ளம் நாலாபுறத்தி லும் வழிந்தோடிற்று. இரு கைகளையும் அகல விரித்துக்கொண்டு, ஜீவகளையற்ற கண்களால் விழித்துப் பார்த்தவாறு, மியூஸியோ பாதையில் நின்ருன்...........பேபியோ அவனருகே ஓடிஞன். மியூஸியோ அவ்னைக் கவனிக்காமல் மெதுவாக அடி யெடுத்து வைத்துப் பங்களாவை நோக்கி நடந்தான். அவனுடைய முகத்திலே புன்னகை பொங்கியது. பேபியோ பெயர் சொல்லி அழைக்க முயன்ருன்.... ஆஞல் அதேசமயம் தன் வீட்டு ஜன்னலில் ஏதோ ஓர் ஓசை உண்டாயிற்று.......அவன் சுற்று முற் றும் பார்த்தான்...........

ஜன்னல் கதவு திறந்திருந்தது. அதன் அடியில் கால்வைத்துக்கொண்டு வேலரியா நின்றிருந்தாள்........முன்னால் விரிந்திருந்த அவளுடைய கைகள் மியூஸியோவைத் தேடுவதுபோ லிருந்தன.

பேபியோவின் மனத்தில் சொல்லவொண்ணுத ஆத்திரம் பொங்கி எழுந்தது. "அடே! அயோக்கியப் பயலே!" என்று கத்திக் கொண்டே மியூஸியோ மீது பாய்ந்தான். ஒருகையால் அவனுடைய தொண்டையைப் பற்றிக்கொண்டு, மற்ரெரு கையால் இடுப்பில் செருகியிருந்த உடைவாளை உருவி அவன் வயிற்றில் செலுத்தினன்.

மியூஸியோ 'கிரீச்' என்று சத்தமிட்டான். வயிற்றை ஒரு கையால் பலமாக மூடிக்கொண்டு அதிதி இல்லத்தை நோக்கி ஓட்டமெடுத்தான்........ பேபியோ மியூஸியோவைக் குத்தியவுடனே, வேலரியாவும் பயங்கரமான முறையில் ஓலமிட்டுக்கொண்டு கீழே சாய்ந்தாள்.

பேபியோ அவளருகே ஓடினன். இருகையாலும் அவளைத் தூக்கி மஞ்சத்தில் படுக்க வைத்தான். பேசிப்பார்த்தான்........வெகு நேரம்வரை வேலரியா அசைவற்றுப் படுத்திருந்தாள். கடைசியில் ஒருவாறு கண் திறந்தாள். அப்பொழுது, மரணத்திலிருந்து தப்பித்துக் கொண்டவர்களைப் போல அவள் சந்தோஷமாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். கணவனைப் பார்த்தவுடனே, எழுந்து அவ

னுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டாள். மார்பை இறுகத்தழுவினள்.

அவளுடைய நா குழறிற்று. "நீங்களா !—நீங்கள்தானு ?" என்று சொல்லிக்கொண்டாள். அவள் முகத்தில் ஒரு குறுநகை நிலவியது. "கடவுள் அருளால் எல்லாம் ஒருவகையாக முடிந்தது........ஆனல் ரொம்பக் களைப்பா யிருக்கிறது" என்ருள்—அப்படியே தூங்கிப்போய்விட்டாள்.

10

நடந்த காரியத்தைப்பற்றி பேபியோ யோசிக்க ஆரம்பித்தான்........இனி என்ன செய்வது? உண்மையை மறைப்பதில் பிரயோஜனமில்லை. நீதிபதியிடம் சொல்லிவிடவேண்டியதுதான்........ஆனல் எப்படிச் சொல்லுவது?........தன்னுடைய வீட்டில் தனது ஆப்த நண்பனும் உறவினனுமாகிய மியூஸியோவைக் கொன்றுவிட்டான்! "என்ன விஷயம்? காரணம் என்ன?........" என்று ஜனங்கள் கேட்பார்களே!—சரி, மியூஸியோ இறந்திராவிடில்?—இந்த நிலைமையில் ஊசலாட அவனல் இயலவில்லை. மெதுவாக எழுந்தான்! அதிதி இல்லத்தை நோக்கிச் சென்ருன். அங்கு அமைதி நிலவியது. ஒரே ஒரு ஜன்னலிலிருந்து மாத்திரம் வெளிச்சம் தோன்றியது. மணலிலே ஆங்காங்கு ரத்தம் சிந்தி

யிருந்தது. பேபியோ கதவைத் திறந்து பார்த்தான்.... வியப்பினல் சிலை போல நின்ருன்........

அறையின் மத்தியில், ஒரு பாரசீகக் கம்பளியின் மேலே, ஜரிகைவேலைப்பாடுகளமைந்த தலையணையின்மீது சாய்ந்து மியூஸியோ படுத்திருந்தான். அவனுடைய உடம்பின்மேல் ஒரு நீலநிறச் சால்வை விரிக்கப் பட்டிருந்தது. முகம் மஞ்சள் பூத்திருந்தது. கண்கள் மூடியிருந்தன. கண்ணிமைகள் மேலே பார்த்தவாறு இருந்தன. சுவாசத்தைக் காணேம். மியூஸியோ சவம் போலத் தோன்றினன். காலடியில் மலாய்க்காரன் குனிந்திருந்தான். அவன் கையில் நீர்வேம்பு போன்ற ஒருவகைக் கொடி இருந்தது. அவனுடைய கண்கள் யஜமானேப் பார்த்தவாறு இருந்தன. ஒரு சிறு விளக்கு நீல நிறமான சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது.

பேபியோ வாசலில் நின்றதை மலாய்க்காரன் பார்த்தான். ஆனல் எழுந்திருக்கவில்லை. கடைக் கண்ணுல் ஒரு முறை பார்த்துவிட்டு வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டான். கொஞ்சநேரங் கழிந்தது. அவன் மெதுவாக எழுந்து கையில் பிடித்திருந்த கொடியை மேலும் கீழுமாக அசைத்தான்—அவனுடைய உதடுகள் எதையோ முணுமுணுத்தன. மந்திரம்போல மியூஸியோவுக்கும் மலாய்க்காரனுக்கும் இடையே பேபியோவின் உடைவாள் கிடந்தது. ஊமையன், தன் கையில்

வைத்திருந்த கொடியால் இரத்தம் தோய்ந்த அந்த உடைவாளைப் படீரென்று அடித்தான். ஒரு நிமிஷம்........ மற்றொரு நிமிஷம் ஆயிற்று. பேபியோ மலாய்க்காரனருகே சென்று குனிந்தவாறு “இறந்துவிட்டானா?” என்று கேட்டான. அவன் தன்னுடைய இடதுகை ஆள்காட்டி விரலால் வாசலைச் சுட்டிக்காட்டினான். பேபியோ மறுபடியும் பேச வாயெடுத்தான். ஆனால் மலாய்க்காரன் மீண்டும் வாசலைச் சுட்டிக்காட்டவே, அவன் அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

வேலரியா இன்னும் தூங்கிக்கொண்டிருந்தாள். பேபியோ ஜன்னல் அருகே உட்கார்ந்து தலையைக் கையால் தாங்கியவாறு யோசித்துக் கொண்டிருந்தான்.

11

வேலரியா எழுந்தபின் பெராராவுக்குப் போகலாமென்று கருதியவனாய், பேபியோ பள்ளியறையில் உலாவிக் கொண்டிருந்தான் — இச்சமயத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். பேபியோ கதவைத் திறந்தான். வயது முதிர்ந்த வேலைக்காரனான அன்டானியோ நின்றுகொண்டிருந்தான்.

“எஜமான், மியூஸியோ ஐயாவுக்கு உடம்பு சரியாயில்லையாம். பெராராவுக்குப் போக விரும்புகிறாராம்; மலாய்க்காரன் சொன்னான். சாமான்

களை மூட்டைகட்ட ஆளும், அவற்றைக் கொண்டு செல்லச் சில குதிரைகளும் வேண்டுமாம். என்ன சொல்லுகிறீர்கள்?''

"இவ்வளவையும் மலாய்க்காரனா சொன்னான்'' எப்படி?—அவன் ஊமையனாச்சே!''

"ஒரு கடுதாசியில் எழுதிக் காட்டினான், இத்தாலிய பாஷையில்—ஒரு தப்புக் கூட இல்லை; கடுதாசியும் இதோ வைத்திருக்கிறேன்''

"உம்—மியூஸியோவுக்கு உடம்பு சரியா இல்லையா?

"ஆமாம், அவரைப் பார்க்கக்கூட முடியாதாம்''

"டாக்டரை அனுப்பக் கூடாதா?''

"மலாய்க்காரன் வேண்டாமென்கிறான்.''

"குதிரையும் ஆளும் வேண்டுமென்று சொன்னவன் அவன்தானா?

"ஆமாம் எஜமான்''

பேபியோ கொஞ்சநேரம் பேசாமலிருந்தான். கடைசியில், "சரி, கேட்பதை அனுப்பிவை'' என்றான்.

அன்டானியோ போய்விட்டான்.

பேபியோ பிரமையுடன் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்— "அப்படியா சமாசாரம், அவன் சாகவில்லையா?'' சிரிப்பதா அழுவதா வென்று அவனுக்குத் தெரியவில்லை—"உடம்பு சரியாயில்லையா? கொஞ்சநேரத்துக்கு முன்னால்

தானே அவனுடைய பிரேதத்தைப் பார்த்தேன்!''

பேபியோ வேலரியாவருகே வந்தான். அவள் எழுந்து தலையை தூக்கிப் பார்த்தாள்.

"இறந்து போய்விட்டானு, இல்லையா?''

பேபியோ நடுங்கினுன்.

"என்ன?........இன்னுஞ் சாக?—நீங்கள்........ அவன் போய்விட்டானு?''

பேபியோ கொஞ்சம் ஆறுதல் அடைந்தான். "இன்னும் போகவில்லை; ஆனுல் இன்று போய் விடுவான்.''

"அவனை இனி மறுபடியும் பார்க்கும்படியாய் இராதே?''

"இராது.''

"அந்தப் பயங்கரமான காட்சி இனித் தோன்ருதே?''

"தோன்ருது.''

வேலரியா ஒரு நீண்ட பெருமூச் செறிந்தாள். அவளுடைய அதரங்களிலே ஒரு புன்னகை தவழ்ந்து விளையாடியது. புருஷனை நோக்கி இரு கையையும் நீட்டினுள்.

"இனிமேல் நாம் அவனைப்பற்றிப் பேசக் கூடாது........அவன் போகும்வரையில் நான் இந்த அறையைவிட்டு வெளியேற மாட்டேன். ஆனுல் இப்போது வேலைக்காரிகளை அனுப்பிவைக்கிறீர்

களா.......இருங்கள், இருங்கள்: அதோ மேஜை மேல் கிடக்கிறதே அதை எடுத்துக் கொண்டுபோய் (மியூஸியோ கொடுத்த முத்துமாலே) கிணற்றில் போட்டுவிடுங்கள்''

பேபியோ அந்த முத்துமாலேயைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதிலிருந்த முத்துக்களின் ஒளி மங்கி யிருந்தது. மனேவி வேண்டுகோளுக் கிணங்கி அதைக் கிணற்றில் போட்டுவிட்டான். அப்புறம், தோட்டத்தில் உலாவியவாறு, தூரத்தி லிருந்த அதிதி இல்லத்தைப் பார்த்துக்கொண்டிருந் தான். அங்கு 'மூட்டை கட்டும்' இரைச்சல் அதிகமா யிருந்தது. வேலேயாட்கள் பெரிய பெரிய பெட்டிகளேக் கொண்டுவந்து குதிரைகள்மேல் ஏற்றிக் கொண் டிருந்தனர்.......ஆனல் மலாய்க்காரனேக் காணேம். உள்ளே என்ன நடக்கின்றதென்பதைப் பார்க்க பேபியோவுக்கு ஆவலுண்டாயிற்று. அந்த வீட்டின் பின்புறத்தில் ஒரு சுரங்கவழி உண்டு என்பது பேபியோவுக்கு இப்போதுதான் ஞாபகத்திற்கு வந்தது. அந்த வழியாகப் புகுந்து உள்ளே பார்த்தான்.

12

இப்பொழுது மியூஸியோ கம்பளியில் படுத்திருக்க வில்லே. யாத்திரீக உடையணிந்து சாய்வு நாற் காலியில் உட்கார்ந்திருந்தான். ஆனல், முன்போல

இப்போதும் பிரேதம்போலத் தோன்றினான். தலை நாற்காலியின் பின்னால் சாய்ந்திருந்தது. கைகள் கட்டைபோலக் கிடந்தன. சுவாசத்தைக் காணோம். நாற்காலியைச் சுற்றிக் கீழே பலவகை மூலிகைகள் கிடந்தன. பல கோப்பைகளில் கருநிறத் திராவகம் நிறைந்திருந்தது. அதிலிருந்து கஸ்தூரி மணம் வந்துகொண்டிருந்தது. அது மூச்சைத் திணற வைப்பதா யிருந்தது. ஒவ்வொரு கோப்பையைச் சுற்றிலும் ஒரு பாம்பு படுத்திருந்தது. மியூஸியோவுக்குச் சில அடி தூரத்திற் கப்பால் மலாய்க்காரன் உட்கார்ந்திருந்தான்.

அவன் பேசாதிருக்கவில்லை. பிரார்த்தனை செய்வதுபோலப் பலமுறை எழுந்து குனிந்து வணங்கினான். கைகளைப் பக்கவாட்டில் விரித்தான். மியூஸியோவின் எதிரிலும் நீட்டினான். இன்றும் என்னென்னவோ செய்தான். கடைசியில் பெருமூச்செறிந்தான். அவனுடைய நெற்றியிலிருந்து வியர்வை வழிந்தோடியது. ஓரிடத்தில் அமைதியாக நின்று, சுவாசத்தை நிரப்பிக்கொண்டு முன்னால் திரும்பினான். இருகைகளையும் மடக்கியவாறு மார்புக்கு நேரே நீட்டினான்........என்ன பயங்கரம்! பின்னால் தொங்கிக் கிடந்த மியூசியோவின் தலை நிமிர்ந்தது........மலாய்க்காரன் கைகளைக் கீழே நீட்டினான். மியூஸியோவின் தலை பின்னால் சாய்ந்தது. மலாய்க்காரன் செய்த சைகைகளுக்கேற்ற

வாறு மியூஸியோவின் தலை ஆடிற்று. கோப்பைகளி லிருந்த கருந்திராவகம் சீறிற்று ; பாம்புகள் அங்கு மிங்கும் நடமாடலாயின.

மலாய்க்காரன் இன்னும் இரண்டொரு அடி முன்சென்றான். இருகைகளையும் கொட்டாப்புளி போல அகலவிரித்து மியூஸியோவைப் பார்த்துத் தலையசைத்தான்....பிரேதத்தின் இமைகள் துடித் தன....கருவிழிகள் மேலும் கீழுமாக ஒதுங்கின. கண்களிலே உயிர் உண்டாயிற்று. மலாய்க்கார னின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. வாயைத் திறந்து மிகவும் பிரயாசையின் பேரில் 'ஓ' வென்று இரைந்தான்.... மியூஸியோவின் உதடுகள் அசைந் தன. அவனும் பதிலுக்கு இரைந்தான்.

இதற்குமேல் கண்கொண்டு பார்க்கப் பேபியோ வால் முடியவில்லை. வீட்டை நோக்கி ஓட்டம் பிடித் தான்.

13

மூன்று மணிநேரம் கழிந்தது. அன்டானியோ மீண்டும் வந்து, "எல்லாம் தயாரா யிருக்கிறது. சாமான்களைக் குதிரை மேல் ஏற்றியாகிவிட்டது. மியூஸியோ புறப்படப்போகிறார்" என்றான். பேபியோ ஒருவார்த்தைகூடப் பதில் சொல்லாமல் மாடியில் ஏறிப் பார்த்தான். அதிதி இல்லத்தின் வாசல் முன்னால் சாமான்களை ஏற்றிக்கொண்டு பல

குதிரைகள் தயாராயிருந்தன. வேலைக்காரர்கள் நின்றுகொண்டிருந்தனர். திடீரென்று கதவு திறந்தது. மியூஸியோ தோன்றினான். அவனுடைய முகம் வெளுத்திருந்தது. கைகள், உணர்ச்சி யற்ற கட்டை போல் தொங்கின—ஆனால் அவன் நடந்தான்........ ஆம்! மலாய்க்காரன்மீது சாய்ந்தவாறு மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்தான். குதிரைமேல் ஏறினான். கடிவாளத்தைக் கையில் பிடித்துக் கொண்டான். மலாய்க்காரன் பின்னால் உட்கார்ந்து, மியூஸியோவின் இடுப்பைப் பிடித்துக்கொண்டான். பிரயாணம் ஆரம்பமாயிற்று. குதிரைகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றன. பேபியோவின் பங்களா வழியாகத்தான் செல்லவேண்டும். அவன் பார்த்துக் கொண்டே இருந்தான்........ மியூஸியோ வேறு பக்கமாகக் கண்ணைத் திருப்பிக் கொண்டானே? மலாய்க்காரன் மட்டும் வந்தனம் செய்தான்........ அதுவும் பரிகசிக்கும் முறையில்.

இதை வேலரியா பார்த்தாளா? பள்ளி யறையின் ஜன்னல் கதவுகள் மூடியிருந்தன.

14

வேலரியா மத்தியானம் சாப்பிட வந்தாள். அவள் மிக அமைதியாகவும் அன்பாகவும் இருந்தாள். ஆனால் களைப்பும் சோர்வும் அதிகமாயிருப்பதாகக் கூறினாள். மியூஸியோ பயணமான மறுநாள்,

பேபியோ தன் மனேவியின் உருவப் படத்தை மீண்டும் கையில் எடுத்தான். அவளுடைய முகத்தில் தற்காலிகமாக மறைந்திருந்த அந்தப் புனிதமான முகபாவத்தைப் பார்த்தவாறு எழுதுகோலே வர்ணத்தில் குழைத்துப் படத்தை எழுதி முடித்தான்.

தம்பதிகள் முன்போல' வாழ்க்கை நடத்தலாயினர். போன இடம் தெரியாமல் மறைந்தான் மியூஸியோ. அன்றிரவு நடந்த பயங்கரமான விஷயங்களே மனேவியிடம் சொல்லலாமென்று கருதி, ஒரு நாள் பேபியோ வாயெடுத்தான்........இது வேலரியாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவளுடைய முகத்தில் இருள் சூழ்ந்தது. ஏதோ ஒரு விபத்து நேரப்போவது போல அவளுக்குத் தோன்றியது.... பேபியோ புரிந்துகொண்டு வாயை மூடினன்.

இலேயுதிர்காலம்.

பேபியோ ஓவியத்திற்கு இறுதியாகச் சில வர்ணங்கள் தீட்டிக்கொண்டிருந்தான். வேலரியா தம்பூராவை மடியில் வைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கைவிரல்கள் தந்திகளே மீட்டிக்கொண்டிருந்தன......திடீரென்று பிடிலிலிருந்து அதேகீதம்....மியூஸியோ பாடிய காதல் வெற்றிக் கீதம் எழுந்தது........அதேசமயம் கருவில் வளர்ந்து வந்த ஒரு புதிய ஜீவன் வயிற்றில் அசைந்தது........ வேலரியா திடுக்கிட்டாள்...........இதற்கு அர்த்தம் ?

இதனேடு கையெழுத்துப் பிரதி முடிவுற்றது.